//Revised//

வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்: 3865 /ஆ4/ 2023, நாள்.09.05.2024

பொருள் : பள்ளிக்கல்வி –கல்லூரி கனவு –உயர்கல்வி வழிகாட்டுதல் புத்தாக்க பயிற்சி –வி.ஐ.டி அண்ணா அரங்கத்தில் 14.05.2024 அன்று காலை 9.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை நடைபெறுதல் – மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வெழுதிய மாணவர்கள் பங்குபெற பள்ளிகளுக்கு – தெரிவித்தல் –சார்பு

=========

வேலூர் மாவட்டத்தில் நடைபெற்று முடிந்த மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டதை தொடர்ந்து, மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் " கல்லூரி கனவு திட்டம் "மூலம் மாணவ /மாணவியர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி வருகின்ற 14.05.2024 அன்று காலை 9.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை வி.ஐ.டி அண்ணா அரங்கத்தில் நடைபெறவுள்ளது. எனவே அரசு/நகரவை/ஆதிதிராவிட நல/ அரசு நிதியுதவிப்பள்ளி தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் மேல்நிலை இரண்டாமாண்டு தேர்ச்சி பெற்ற இணைப்பில் கண்டுள்ள மாணவ/ மாணவியர்களுக்கு தகவல் அளித்து தலைமையாசிரியர் , Carrier Guidance பொறுப்பு ஆசிரியர் மற்றும் மாணவ/மாணவியர்களோடு இந்நிகழ்ச்சியில் தவறாமல் கலந்து கொள்ள, அரசு/நகரவை/ஆதிதிராவிட நல/ அரசு நிதியுதவிப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இத்துடன் இணைப்பில் காணும் படிவங்களை மாணவர்களின் விவரங்களை பூர்த்தி செய்து நிகழ்ச்சி நடைபெறும் நாளன்று ஒப்படைத்திட அரசு/நகரவை/ஆதிதிராவிட நல/ அரசு நிதியுதவிப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :

1. பள்ளி மாணவர்களின் பெயர் பட்டியல்
2. படிவம்
3. பொறுப்பு பள்ளித் தலைமையாசிரியர் பெயர் பட்டியல்

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்

1. அரசு/நகரவை/ஆதிதிராவிட நல/ அரசு நிதியுதவிப்பள்ளி தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

1. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்து அனுப்பிவைக்கப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.